(உ) சென்னையிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் நெல்லூருக் கருகில் பிடித்து வைக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 ஆம் தேதியன்று 26 மீனவர்களைக் காணோம் என்று பத்திரிகைக் குறிப்பு வந்திருக்கிறது. மேலும் நேரிடையாகவும் என்னிடத்திலே வந்து சொன்னார்கள். 25 ஆம் தேதியன்று 26 மீனவர்கள் 4 விசைப்படகுகளிலே, எம்.கே.ஜே. 1, உல்கை 1, சிவா, திருச்செல்வி என்ற படகுகளிலே சென்னையிலே இருந்து மீன் பிடிப்பதற்காக ஆந்திர மாநிலத்தில் நெல்லூர் மாவட்டத்திற்கருகில் சென்றிருக்கிறார்கள். நெல்லூர் மாவட்டத்தின் எல்லையில் 5 கிலோ மீட்டர் தள்ளித்தான் நம்முடைய மீனவர்கள் மீன் பிடிக்கக்கூடாது. ஆனால் வோர்ல்டு பார்டர் என்று சொல்லுகிற 5 கிலோ மீட்டருக்கு தாண்டி அவர்கள் மீன் பிடித்திருக்கிறார்கள். அந்த 26 மீனவர்களை நெல்லூரிலே இருக்கிற ரௌடிகள் பிடித்து வைத்திருக்கிறார்கள். அங்கே இருக்கிற காவல் துறையினர் அல்ல. ரௌடிகள் பிடித்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு போட்டிலேயிருந்தும் 2 லட்சம் ரூபாய்க்குப் பெறுமான இரால் மீன்கள், எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அந்தப் படகுகளிலே இருக்கக் கூடிய மெட்டீரியல்ஸ், வலைகள் போன்றவைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே இருக்கிற காவல் துறையினரிடத்திலே ஒப்படைக்கப்படவில்லை. அந்த ரௌடிகளே வைத்திருக்கிறார்கள். இவர்கள் இங்கேயிருந்து நேரிடையாகச் சென்று கேட்டதற்குப் பின்னால் ஒரு நபருக்கு 20 ஆயிரம் தந்தால் அவரை விட்டு விடலாம் என்று சொல்கிறார்கள். இந்தப் பிரச்சனை ஏறத்தாழ 6 மாதமாக நடந்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய பகுதியில் மீன் பிடிப்பதற்கு வசதி இல்லாத காரணத்தினால் தான் ஆந்திர மாநிலத்தில் உள்ள நெல்லூர் பகுதிக்குச் சென்றிருக்கிறார்கள். அப்படி வோர்ல்ட் பார்டரில் பிடிப்பதற்கு ஆந்திர மாநிலத்தினுடைய அனுமதி தேவையில்லை. மேலும் அங்கே இருக்கிற அதிகாரிகள் இதைச் செய்யவில்லை. அங்கே இருக்கிற ரௌடிகள் நம்முடைய மீனவர்களைத் துன்புறுத்துகிறார்கள். எனவே அருள் கூர்ந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவருடைய நண்பராக இருக்கிற என். டி. ஆர். அவர்களை அணுகி இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தச் செய்தியை நண்பர் அவர்கள் இங்கே சொன்னதைப் போல காலையில் தான் நானும் பத்திரிகையில் பார்த்தேன். திரு. சுந்தரதாஸ் அவர்களே இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆந்திராவிலே உள்ள காவல் துறையினர் யாரும் அவர்களைக் கைது செய்து வைக்கவில்லை என்றும் அங்குள்ள மீனவர்கள் சிலர் நம்முடைய தமிழ்நாட்டு மீனவர்களைக் கைது செய்தோ அல்லது வேறு முறையிலோ அடைத்து வைத்திருக்கிறார்கள் என்றும்

அவர்களே குறிப்பிட்டுச் சொன்னார்கள். உடனடியாக ஆந்திர மாநில போலீஸ் அதிகாரியோடு நம்முடைய போலீஸ் அதிகாரிகள் தொடர்பு கொண்டு அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

(ஆ) சென்னை கிரிக்கெட் கிளப்பில் வேட்டி கட்டிச் சென்றவர்களுக்கு அனுமதி மறுப்பு—தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிக்க சபாநாயகர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சனை அடிப்படையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளாக இதனை வைக்க விரும்புகிறேன். வி. ஆர். கிருஷ்ண ஐயர் என்று சொல்கின்ற பெருமகனாருக்கு ஏற்பட்ட அந்தச் சம்பவம்—(மணியடிக்கப் பெற்றது) ஒரு செய்தி சொல்ல வேண்டியிருக்கிறது—மாண்புமிகு பொன் விஜயராகவன் அவர்கள் இங்கே எழுப்பினாலும் முதல்வர் அவர்களுடைய உள்ளத்திலே அது வேதனை எழுப்பியிருக்கிறது என்பதனை நாமும் உணர்கிறோம். எல்லோரும் வேதனையிலே பங்கு கொள்கிறோம். சுதந்திரப் போராட்டம் நடந்த போது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேட்டி கட்டிய எல்லோருமே வேதனைப்படுகிறோம். (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன் : ரொம்ப மகிழ்ச்சி. சுதந்திரப் போராட்டம் நடந்த போது வெள்ளையர்கள் நமது நாட்டை ஆண்டுக்கொண்டிருந்த நேரத்தில், பம்பாயிலே ஒரு பெரிய ஓட்டலைக் கட்டி வெள்ளையர்கள் தங்களுடைய திமிரின் காரணத்தாலே "நாய்களும் இந்தியர்களும் அனுமதிக்க மாட்டார்கள்" என்ற அறிவிப்புப் பலகையைப் போட்டார்கள். ஒரு தேச பக்தன் இந்தியன் லண்டனுக்குச் சென்று ஒரு பெரிய உணவு விடுதியை வாங்கி அங்கே, 'நாய்களும், ஐரோப்பியர்களும் உள்ளே நுழையக் கூடாது' என்று போட்டு தன்னுடைய வீரத்தைக் காட்டினான். இவ்வளவு வரலாறு நிகழ்ந்த ஒரு நாட்டில் நம்முடைய தலைநகரமாக, பெரிய கலாச்சார மாநிலமாக இருக்கின்ற சென்னையில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திலே கொண்டு, சட்டம் இருக்கிறதா நடவடிக்கை எடுப்பதற்கு என்ற ஒரு ஐய வினாவையும் எழுப்பி இங்கே அமர்ந்தார்கள். ஏனென்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுடைய உள்ளத்தில் வந்துவிட்டது என்பது தெரிகிறது. அப்படி எடுக்க முடியவில்லையென்றால்—அவர் நினைத்தால் எடுக்க முடியும்—அதிலும் இடர்பாடுகள் இருக்குமானால், நாம் அனைவருமே சேர்ந்து மக்கள் போராட்டம் நடத்தியாவது இந்த நாட்டு மக்களுடைய கலாச்சாரத்தைக் காப்பாற்றுவதற்கு முன்வர வேண்டுமென்பதனை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் பணிவான வேண்டுகோளாக வைக்கின்றேன்.